# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

சக்கராம்பாளையம், அகரம்(அஞ்சல்), எலச்சிப்பாளையம்,
திருச்செங்கோடு(வட்டம்), நாமக்கல் (மாவட்டம்)-637 202.
அலைபேசி : 99655-31727, 99655-35967

## + 1 பொதுத்தேர்வு - மார்ச் -2019

## TENTATIVE ANSWER KEY

**பாடம்: வணிகவியல்** **மதிப்பெண்:90**

| வினா எண் | பாடப்பொருள் | Marks |
|---|---|---|
| | பகுதி - I | |
| | **உரிய விடையைக் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** | |
| 1 | ஈ) கோவிலுக்குச் செல்வது | |
| 2 | இ) தனியாள் வணிகம் | |
| 3 | ஆ) பெயரளவு கூட்டாளி | |
| 4 | ஆ) பங்குதாரர்கள் | |
| 5 | ஈ) கூட்டுறவு சங்கம் | |
| 6 | ஈ) எஸ் பி ஐ | |
| 7 | ஈ) சிறப்புபொருள் பண்டக காப்பகம் | |
| 8 | ஆ) விமானம் | |
| 9 | அ) கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டாவனம் | **20x1=20** |
| 10 | இ) மின்னணு வணிகம் | |
| 11 | இ) மேற்கண்ட அனைத்தும் | |
| 12 | அ) வட்டி | |
| 13 | அ) 2006 | |
| 14 | ஈ) அந்நிய செலாவணி மாற்று பத்திரம் | |
| 15 | அ) இரண்டு | |
| 16 | இ) சிறிய | |
| 17 | ஈ) மூன்று | |
| 18 | அ) மூன்றாவது நபர் | |
| 19 | ஈ) நேரடி வரி | |
| 20 | ஆ) மார்ச் 1, 2017 | |

| | பகுதி - II | 7x2=14 |
|---|---|---|
| 21. | **நாளங்காடி :**<br>❖ பொருட்கள் விற்குமிடம் அங்காடி என அழைக்கப்பட்டுள்ளது. பகலில் நடப்பதை நாளங்காடி எனப்படும். | 2 |
| 22. | **இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்:**<br>❖ தாயபாகா<br>❖ மிட்டாக்சரா | 2 |
| 23 | **வெளிநாட்டு வங்கிகள்:**<br>❖ வெளிநாட்டில் பதிவு அலுவலகத்தையும், இந்தியாவில் கிளைகளையும் கொண்ட வங்கிகள், வெளியாட்டு வங்கிகள் என்று அழைக்கப்படுகினறன.<br>❖ (உ.ம்) பாங்க் ஆ.ஃ.ப் அமெரிக்கா, பார்க்லெஸ் பாங்க். | 2 |
| 24 | **ஒப்பந்தத்தை வரையறுக்க:**<br>❖ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டு சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கையாகும்.<br>❖ சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்படிக்கை ஒப்பந்தங்கள் அல்ல. | 2 |
| 25. | **தனி உரிமம் பெற்றவர் என்பவர்:**<br>❖ தனி வியாபார நிறுவனத்தின் வணிகக் குறியீட்டை சட்டப்படி பயன்படுத்தும் உரிமம் பெற்ற ஒரு தனிநபரை தனி உரிமம் பெறுபவர் என அழைக்கிறோம். | 2 |
| 26. | **பன்னாட்டு நிறுவங்கள் :**<br>❖ பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் வியாபாரத்தை நடத்துவதாகும் | 2 |
| 27. | **குறு நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள்:**<br>❖ மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள், போக்குவரத்து (மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள்) பழுதுபார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத்தொழில்கள், கைத்தறி, கைவினைத் தொழில்கள் ஆகியவற்றை குறு நிறுவனங்களுக்கு உதாரணமாக கூறலாம். | 2 |

ஸ்ரீ வித்யபாரதி

| | | |
|---|---|---|
| 28. | **சிறப்பு பண்டகசாலைகள் :**<br><br>❖ புகையிலை பருத்தி கம்பனி போன்ற குறிப்பிட்ட வதை பொருட்கள் பாதுகாப்பதற்க்காக இவை சிறப்பாக வடிவமைக்கட்டுளள்ன .<br>❖ இந்த பண்கடச் காப்பகங்களில் தரம் குறையாமலும் மற்றும் அளவு பாதுகாக்கப்படுகின்றன.<br>❖ பெட்ரோல் மற்றும் எண்ணெய் சேமிப்பகம் ஆகியவற்றிற்கு சிறப்பு வகையிலான செங்குத்து, உருளை சேமிப்பு தொட்டிகள் தேவைப்படுகின்றன. | 2 |
| 29. | **சரக்காணை :**<br><br>❖ இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு சரக்கை வாங்குவதற்கான ஆணையை தானோ அல்லது தன் முகவர் மூலமோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார்.<br>❖ சரக்காணை என்பது சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும். | 2 |
| 30. | **பழமையான போக்குவரத்து:**<br><br>நடைபாதைகள் போக்குவரத்து<br>❖ பொதி விலங்குகள்<br>❖ மாட்டு வண்டிகள் | 2 |
| | **பகுதி - III (எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும்)** | **7x3=21** |
| 31. | **அ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள்:**<br><br>❖ பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் தொழிற்சாலை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை யாகும் இத்தொழிற்சாலை சில கச்சாப் பொருட்களைத் தயாரிப்புக்கு அளிக்கப்படுகிறது.<br>**ஆ) மரபு சார் உற்பத்தி தொழில்கள்:**<br>❖ தாவரங்களும் மிருகங்களும் நுகர்வோரின் உபயோகத்திற்கு வளர்க்கப்படும் தொழிற்சாலையாகும கோழிவளர்ப்பு, மின் வளர்ப்பு, காடு வளர்ப்பு, பால் பண்ணை ஆகியவை இத்தொழிற்சாலைக்கு உதாரணமாகும் | 3 |
| 32. | **வரையறாப் பொறுப்பு:**<br><br>❖ தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. எனவே அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துக்களில் இருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தலாம். | 3 |

| | | |
|---|---|---|
| | ❖ அதனால் அவரது பொறுப்பு முதலீட்டுத் தொகையுடன் நின்றுவிடாமல் தன்சொந்த சொத்திற்கும் ஈடாகிறது. இதனையே வரையறாப் பொறுப்பு என்கிறோம். | |
| 33. | **பயிர்க்காப்பீட்டின் பொருள்:**<br>❖ வறட்சி, வெள்ளம் போன்ற காரணங்களால் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும்போது இழப்பீடு வழங்குவதற்காக செய்யப்படும் காப்பீடு பயிர்க் காப்பீடு அல்லது வேளாண்மைக் காப்பீடு எனப்படும்.<br>❖ நெல், கோதுமை, கம்பு, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் போன்ற பயிர்களுக்கு ஏற்படும் இழப்பு மற்றும் சேதங்களுக்கு ஈட்டுறுதி அளிக்கிறது. | 3 |
| 34. | **வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல்: (எவையேனும் 3 மட்டும்)**<br>❖ உலகின் மூலை முடுக்குகளில் கிடைக்கும் பொருட்களைப் பற்றி வாங்குபவர்கள் மின்னணு<br>❖ வணிகத்தில் அறிய முடிகிறது.<br>❖ பொருளை எப்போது வேண்டுமானாலும் வாங்கும் வாய்ப்பை மின்னணு வணிகம் வழங்குகிறது.<br>❖ பொருள்களை இயல்பாக கடைகளில் சென்று வாங்குவதைக் காட்டிலும் மின்னணு வர்த்தக முறையில் வாங்கும் பொருளின் விலை குறைவாக கிடைப்பதாகக் கூறப்படுகிறது.<br>❖ மின்னணு மூலமாக புத்தகம் வாங்குதல், மென் பொருட்கள் வாங்குதல் என்பது கண் இமைக்கும் நேரத்தில் சாத்தியம். அதாவது உடனடியாக புத்தகம், மென் பொருள் மற்றும் பயன்பாட்டு மென் பொருள் இவைகளை பதிவிறக்கம் (Download) செய்ய முடியும்.<br>❖ **வாடிக்கையாளர்கள் மின்னணு மூலம் நடத்தப்படும் ஏலத்தில்எளிதாக பங்கு பெறமுடிகிறது. மின்னணு ஏலத்தில்வெளிப்படைத் தன்மைஅதிகம்.**<br>❖ **தனி நபர்கள் தாங்கள் உபயோகித்தபொருட்களைக்கூடமின்னணு முறையில்வேறு ஒருவருக்கு எளிதாக விற்பனைசெய்யமின்னணு வணிகமுறை தளம் அமைத்து தருகிறது.**<br>❖ **பொருளை மின்னணு வர்த்தகத்தில் வாங்குபவர்கள் தங்களுக்குச் சாதகமான முறையில்பேரம் செய்து நல்ல விலையில் பொருளைப் பெற்றிடமின்னணு வர்த்தகம் உதவுகிறது.** | 3 |
| 35. | **மொத்த வியாபரிகள் சிறப்பு இயல்புகள்: (எவையேனும் 6 மட்டும்)**<br>❖ **மொத்தவியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப்பொருட்களைவாங்குகின்றனர்**<br>❖ **மொத்தவியாபாரிகள் பொருட்களைமொத்தமாக வாங்கிச் சிறிய** | 3 |

அளவில்விற்பனைசெய்கின்றனர்.

- ❖ **மொத்தவியாபாரிகள் ஒரு குறிப்பட்டபொருளின் பல்வேறு வகைகளைவிற்பனைசெய்கினறனர்.**
- ❖ **பொருட்களைவிநியோகம் செய்யமுகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.**
- ❖ **இவ்வகைவியாபாரத்திற்குப்பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.**
- ❖ **மொத்தவியாபாரிகள் சில்லறை வியாபாரிகளுக்கு கடனுதவி அளிக்கின்றனர்.**
- ❖ **மொத்தவியாபாரிகள் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவி செய்து தருகின்றனர்.**
- ❖ **நகரங்கள் பெருநகரங்களில்உள்ளசந்தைகளின் ஒரு பகுதியில்இவர்கள் செயல்படுவதைக்காணலாம்.**

36. **சிறப்புங்காடிகளின் சிறப்பியல்புகள்: (எவையேனும் 3 மட்டும்)** — 3

- ❖ சிறப்பங்காடிகள் பெரும்பாலும் நகரின் மையப்பகுதிகளில் அமைந்திருக்கும்
- ❖ பொருட்கள் யாவும் விலை, தரம், ரகம் வாரியாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
- ❖ வாடிக்கையாளர்கள் தேவையான பொருட்களை எடுத்து வந்து காசாளரிடம் உரிய தொகையை செலுத்தி வீட்டுக்கு எடுத்துச் செல்வர்.
- ❖ **இங்கு ரொக்கவிற்பனைமட்டுமேஉண்டு. கடன் விற்பனைகிடையாது.**
- ❖ **துறைவாரிப்பண்டகசாலைபோன்று அமைந்திருப்பதால்ஒரேகூரையின் கீழ் அனைத்து வகைப்பொருட்களையும் வாடிக்கையாளர்கள் வாங்கமுடிகிறது.**
- ❖ **இதைஅமைக்கஅதிக முதலீடு தேவைப்படுகிறது.**

37. **கப்பல் இரசீதிற்கும், கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள்: (எவையேனும் 3 மட்டும்)** — 3

| வேறுபாடுகள் | கப்பல் ரசீது | கப்பல் வாடகை முறி |
|---|---|---|
| பொருள் | இது குறிப்பிட்ட அளவு சரக்கை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட துறைமுகத்தில் சேர்ப்பதை குறிக்கக்கூடிய ஆவணமாகும் | இது சரக்கை அனுப்ப மொத்த கப்பலையோ அல்லது பெரும் கப்பலின் ஒரு பகுதியையோ வாடகைக்கு அமர்த்துவதற்கான உடன்பாடு ஆகும். |
| மாற்றும் தன்மை | இதை எளிதில் | இதை மூன்றாம் |

| | | |
|---|---|---|
| | மேலெழுதுதல் வாயிலாக மூன்றாம் நபருக்கு மாற்றித்தர முடியும் | நபருக்கு மாற்றித் தர முடியாது. |
| கடன் பெறுதல் | இதை பிணையமாக வைத்து கடன் பெறலாம் | இதை பிணையமாக வைத்து கடன் பெற முடியாது. |
| குத்தகை | இது கப்பலை குத்தகை எடுத்தகற்கான ஆதாரம் அல்ல | இது கப்பலை குத்தகை எடுத்ததற்கான ஆதாரம் ஆகும். |

38. **ஒப்பந்த நிறைவேற்றத்தை கோரபவர்:** — 3

**வாக்குறுதி பெறுபவர்:**

- ❖ வாக்குறுதி பெறுபவர் மட்டுமே ஒப்பந்த நிறைவேற்றத்தைக் கோரலாம்

**சட்டரீதியான பிரதிநிதி:**

- ❖ சில சூழ்நிலைகளில் சட்டரீதியான பிரதிநிதி நிறைவேற்றத்தைக் கோரலாம்

**மூன்றாம் நபர்:**

- ❖ விதிவிலக்காக சில சூழ்நிலைகளில் அயலால் (மூன்றாம் நபர்) கூட நிறைவேற்றத்தைக் கோரலாம்.

39. **ஐவகை வருமானத் தலைப்புகள்:** — 3

- ❖ சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு: 15-17)
- ❖ வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு: (22-27)
- ❖ வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலின் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28-44)
- ❖ மூலதன ஆதாயங்கள் (பிரிவு: 45-55)
- ❖ ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு: 56-59)

40. **தனியாள் வணிகம் / இந்து கூட்டுக்குடும்பம்** — 3

**குறைபாடுகள்:**

- ❖ அளவான மூலதனம்
- ❖ வரையறுக்கப்பட்ட மேலாண்மைத்திறன்
- ❖ வரையறாப் பொறுப்பு
- ❖ சிறப்பு தேர்ச்சியின்மை
- ❖ அவசர முடிவு

## பகுதி - IV — 7x5=35

41. **அ) வணிகத்தின் தடைகள்: (ஐந்து மட்டும்)**

- ❖ ஆள்சார் தடை
- ❖ இடத்தடை
- ❖ காலத்தடை

ஸ்ரீ வித்யபாரதி

| | | |
|---|---|---|
| | ❖ இடர் மற்றும் தரக்குறைவுத் தடை<br>❖ நட்ட இடர்பாட்டுத்தடை<br>❖ அறிவுசார் தடை<br>❖ பண்டப் பரிமாற்றத்தடை<br>❖ நிதித்தடை<br>❖ பொருட்களைத் துல்லியமாக தயாரிப்பதில் தடை<br>❖ பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக கொண்டு செல்லுதல் | **5** |
| | **(அல்லது)**<br>**ஆ) (i) இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம்:**<br>❖ எந்த ஒரு நிறுமம் ஈட்டிய வருவாயின் ஒரு பகுதியைப் பங்குநர்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டு, மீதமுள்ள இலபாபத்தைச் சேமித்து நிறும வளர்ச்சிக்கு மறுமுதலீடு செய்கின்றன.<br>❖ இதற்கு இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம் அல்லது இலாபத்தை மறு உழவு செய்தல் என்று பெயர்.<br>❖ அதாவது தனிமனிதன் தான் ஈட்டிய வருவாய் அனைத்தையும் செலவு செய்யாமல் எதிர்பாராமல் ஏற்படும் செலவுகட்கு ஒரு பகுதியை சேமித்து வைக்கினறான்.<br>❖ அது போன்று நிறுமங்களும் அவற்றின் வளர்ச்சி, தொழில் விரிவாக்கம், தொழில் பன்முனையாக்கம், புதிய பொருள் அறிமுகம் போன்ற நடவடிக்கைகளுக்கு இருத்தி வைக்கப்பட்ட ஆதாயம் பயன்படுகிறது.<br>**(ii) குத்தகை நிதி:**<br>❖ குத்தகை நிதி என்பது தேவைப்படும் சொத்துக்களைக் குத்தகைக்கு எடுத்து உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் செயலைக் குறிக்கும்.<br>❖ தொடக்க நிலையில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தேவைப்படும் தொடக்கச் சாதனங்களை ரொக்கம் கொடுத்து வாங்க முடியாது இந்நிலையில் குத்தகை நிதி முறை நிறுவனங்களுக்குப் பயன்படுகிறது.<br>❖ சொத்துக்களின் மீது உரிமை கொண்ட நிறுவனங்களுக்கு குத்தகை விடுபவர்'' என்றும், குத்தகைக்கு எடுத்துப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு,'குத்தகை எடுத்தவர்' என்றும் பெயர்.<br>❖ இங்கு ஒப்பந்தமானது குத்தகை ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது. இவ்வொப்பந்தத்தில் குத்தகை காலம், | |

ஸ்ரீ வித்யாபாரதி

குத்தகை தொகை, அதை செலுத்தும் முறை போன்ற நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

42. **(அ) கூட்டாண்மை ஒப்பாவனத்தின் உள்ளடக்கம்: (எவையேனும் ஐந்தினை விவரி)** — 5

- ❖ பெயர்
- ❖ தொழிலின் தன்மை
- ❖ காலவரையறை
- ❖ மூலதனத் தொகை
- ❖ கூட்டாண்மையிலிருந்து எடுக்கும் தொகை
- ❖ இலாப –நட்டப் பகிர்வு விகிதம்
- ❖ மூலதனம் மீது வட்டி
- ❖ எடுப்புத் தொகையின் மீது வட்டி
- ❖ கூட்டாளியின் கடன்
- ❖ கணக்கு ஏடு பாரமரிப்பு
- ❖ கூட்டாளிகளின் சம்பளம் கழிவு
- ❖ கூட்டாளி விலகல்
- ❖ கூட்டாண்மை கலைப்பு

**(அல்லது)**

**(ஆ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பம்சங்கள்: (விவரி)**

- ❖ கடன் ஏடுகளை பராமரித்தல்
- ❖ கடன் எல்லைகளை நிர்வாகத்தில்
- ❖ வசூல் சேவை
- ❖ தனது வாடிக்கையாளர் மூலம் வணிகருக்கு ஆலோசனை கூறல்
- ❖ ரொக்க முன் பணம்

43. **அ)துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகள்: (விவரி)** — 5

- ❖ பேரளவு அமைப்பு
- ❖ பல்பொருள் விற்பனை:
- ❖ துறைகளின் ஒருங்கிணைப்பு
- ❖ வாங்கும் வசதிகள்
- ❖ மையக் கொள்முதல்

**(அல்லது)**

**(ஆ) செலுத்துதல் சமநிலைக்கும் வாணிபச் சமநிலைக்கு உள்ள வேறுபாடுகள்: (எவையேனும் ஐந்து மட்டும்)**

| செலுத்தல் சமநிலை | வாணிக சமநிலை |
|---|---|
| 1. பொருள்: குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டில் | 1. ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு |

| | |
|---|---|
| குடியிப்போர்களுக்கும், மற்ற நாடுகளில் குடியிருப்போர்களுக்கு இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார பதிவுகளின் ஒரு அறிக்கையே ஆகும். | இடையிலான நிகர விளைவைக் குறிக்கிறது. |
| 2. நடவடிக்கைகளின் தன்மை: இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது. | 2.இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படுகிறது. |
| 3. மூலதன நடவடிக்கைகள்: இது மூலதன நடவடிக்கைகளைப் பதிவு செய்கிறது. | 3. மூலதன நடவடிக்கைகளைப் பதிவு செய்வதில்லை |
| 4. நடவடிக்கை உள்ளமைப்பு: இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும். | 4. செலுத்தல் சமநிலையின் நடப்புக் கணக்கின் ஒரு பகுதியாகும். |
| 5. நிகர விளைவு: எப்பொழுதும் பெறுதல் செலுத்துதல் சமநிலையில் இருக்கும். | 5. இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும். |
| 6. பொருளாதார நிலை: நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்துக் கொள்ள உதவுகிறது. | 6. நாட்டின் பொருளாதால வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதில்லை. |
| 7. பாதகமான நிலையை சரி செய்தல்: பாதகமான செலுத்தல் சமநிலை பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. | 7. பாதகமான வாணிக நிலையை சாதகமான செலுத்தல் சமநிலையாக மாற்றலாம். |

44. (அ) **போக்குவரத்து வகைகள்: (எவையேனும் ஐந்தினை விவரி)** — 5

போக்குவரத்து மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை.

1. நிலப் போக்குவரத்து
2. நீாவழிப் போக்குவரத்து
3. விமானப் போக்குவரத்து

**நிலப் போக்குவரத்து:**

- ❖ இப்போக்குவரத்து மூலம் மக்கள் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்படுவதை நிலப் போக்குவரத்து என்கிறோம். .இது

| | | |
|---|---|---|
| | 'மேற்பரப்பு போக்குவரத்து' என்றும் அழைக்கப்படுகிறது.<br>✓ பொதி விலங்குகள்<br>✓ மாட்டு வண்டிகள்<br>✓ சாலை போக்குவரத்து<br>✓ இயந்தி சரக்கேற்றி மற்றும் பேருந்துகள்<br>✓ டிராம் வண்டிகள்<br>✓ தொடர்வண்டி போக்குவரத்து<br>✓ போக்குவரத்தின் சமீபத்திய வளர்ச்சிகள்<br>**நீர் போக்குவரத்து**<br>✓ உள்நாட்டு நீாவழி:<br>✓ பெருங்கடல் அல்லது கடல் போக்குவரத்து<br>✓ கடற்கரை கப்பல்<br>✓ வெளிநட்டு கப்பல்<br>**விமானப் போக்குவரத்து** | |
| | **(அல்லது)**<br>**ஆ) நிறைவேற்றுதல் அடிப்படையில் ஒப்பந்த்தின் வகைகள்: (விவரி)**<br>❖ **நிறைவேறிய ஒப்பந்தம்**<br>❖ நிறைவேற்றய ஒப்பந்தம்<br>❖ ஒருதலை ஒப்புந்தம்<br>❖ இருதலை ஒப்பந்தம் | |
| 45. | **(அ) இடர்களுக்கான காரணங்கள்: (விவரி)**<br>❖ ஊக இடர்கள்<br>❖ நட்ட இடர்கள்<br>❖ காப்பீட்டு இடர்கள்<br>❖ காப்பீட்ட செய்ய முடியா இடர்கள் | **5** |
| | **(அல்லது)**<br>**ஆ) சமூகப் பொறுப்புணர்கள்: (விவரி)**<br>❖ பொருளாதார பொறுப்புணர்வு<br>❖ சட்டப் பொறுப்புணர்வு<br>❖ தொழில் நன்னெறி முறை பொறுப்புணர்வு<br>❖ தன் விரும்ப பொறுப்புணர்வு | |

46

**அ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள்: (எவையேனும் ஐந்து மட்டும்)**

| அடிப்படை | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1. பொருள் | உள் நாட்டு வணிகம் ஒரு நாட்டின் எல்லைக்குள்ளே நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். | பன்னாட்டு வணிகம் நாடுகளின் எல்லைகளைத்தாண்டி நடைபெறும் வியாபார நடவடிக்கையாகும். |
| 2. வியாபாரத்தில் பங்கு பெறுவோர் | ஒரு நாட்டில் உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். | ஒரு நாட்டின் எல்லையைத்தாண்டி உள்ள மக்களும் நிறுவனங்களும் வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கின்றனர். |
| 3. உற்பத்திக் காரணிகளின் இயக்கம் | உற்பத்திக் காரணிகள், உழைப்பு, முதல், தொழில் நுட்பம் ஆகியவை தடையில்லாமல் நாட்டின் எல்லைக்குள் இடம்பெயர முடியும். | உற்பத்திக் காரணிகள், உழைப்பு, முதல், தொழில் நுட்பம் ஆகியவை தடையில்லாமல் நாட்டின் எல்லைத்தாண்டி இடம்பெயர முடியும். |
| 4. நுகர்வோரின் தன்மை | உள் நாட்டு வணிகத்தில் நுகர்வோர் ஒரு நாட்டின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளார்கள். | பன்னாட்டு வணிகத்தில் உலக நாடுகளின் கலாச்சாரம், நடத்தை, விருப்பம், சட்ட நடைமுறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் இணைக்கப்பட்டுள்ளார்கள். |
| 5. வியாபார முறை | உள் நாட்டு வணிகம் ஒரே நாட்டினுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. | பன்னாட்டு வணிகம் பல நாடுகளுடைய விதிகள், சட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகிறது. |
| 6. பயன்படுத்தும் நாணய மதிப்பு | உள் நாட்டு வணிகத்தில் உள்ளூர் நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. | பன்னாட்டு வணிகத்தில் அயல் நாட்டு நாணய மதிப்பில் வியாபார நடவடிக்கைகள் தீர்க்கப்படுகின்றன. |

5

**(அல்லது)**

**ஆ) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரி.**

**1.இறக்குமதி வியாபாரம்**

- ❖ உள்நாட்டு தேவைக்கான வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்,
- ❖ (உ.ம்) இந்தியா இயந்திர சாதனயங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. விரைவான இயந்திரமாக்கலுக்காகவும். நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்யவும், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இறக்குமதி வியாபாரம் முக்கியமானது.

**2. ஏற்றுமதி வியாபாரம்:**

- ❖ உள்நாட்டு பொருட்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.
- ❖ எ. கா இந்தியா இரும்பு, எ்.கு ஆகியவற்றை ஜப்பானுக்கு விற்பனை செய்வது.

**3. மறு ஏற்றுமதி வியாபாரம்:**

- ❖ ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

❖ (உ.ம்) இந்தியாவில் சூரத் நகரில் வைர வியாபாரிகள் தெற்கு ஆப்பிரிக்காவில் இருந்து வாங்கி பட்டைத் தீட்டி மீண்டும் ஆம்ஸ்டர்டம் நகரில் உள்ள வைர வியாபாரிக்கு மறு ஏற்றுமதி செய்கிறார்கள்.

47

**அ) நிறுமங்களின் வகைகள் கூட்டுருவாக்க அடிப்படையில்:**

**பட்டய நிறுமங்கள்:**

- ❖ **ஒரு நாட்டின் அரசாலோ, அரசிடமோ வழங்கப்பட்டசாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று**

5

அழைக்கப்படுகின்றன.

- வழங்கப்பட்ட சாசனத்தில் கூறியுள்ள விதிமுறைகளின்படி இவை செயல்படும்.
- உதாரணம் கிழக்கிந்திய நிறுமம் ஸ்டேண்டார்டு சார்ட்டு வங்கி, இங்கிலாந்து வங்கி மற்றும் ஹைட்சன்ஸ் பே நிறுமம் போன்றவை நிறுமச் சட்டம் இந்த நிறுமத்திற்கு பொருந்தாது. இவ்வகை வங்கிகளை இந்தியாவில் தோற்றுவிக்க இயலாது.

சட்ட முறை நிறுமம்:

- நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச்சட்டமன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள்எனக் கூறப்படுகின்றன.
- அமைப்பு முறையேட்டில் அரசியல் சட்டத்தில் கூறியுள்ளவாறு அமைப்பு முறையீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் அன்றாடம் நடைபெறும் மேலாண்மை நடவடிக்கைகளைச் சங்கநடை முறைவிதிகளில் உள்ளவாறு குறிப்பிட்டபடி நடைபெறும். சட்டபூர்வ நிறுமத்தின் தணிக்கையை இந்தியப் பொதுக் கணக்குத் தணிக்கையாளர் அவர்கள்மேற்கொள்வர். அவர்களின் அறிக்கை நாடாளுமன்றம் / சட்டமன்றங்களில் தாக்கல் செய்யப்படும்.
- உதாரணமாக இந்திய உணவுக் கழகம், ஆயுள்காப்பீட்டுக் கழகம், பொதுக்காப்பீட்டு நிறுவனம், இந்திய ரிசர்வ்வங்கி, பாரத ஸ்டேட்வங்கி, ரயில்வேத்துறை, மின்சாரக் கழகம், சட்டபூர்வநிறுவனங்கள் போன்ற தன்னாட்சி நிறுவனங்கள் இந்நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டது. என்ற வார்த்தையை தனது பெயருக்குப் பின்னால் சேர்க்க வேண்டிய தேவையில்லை

இலாப நோக்கமில்லா சங்கம்:

- பிரிவு 25ன்படி மத்திய அரசு இவ்வகைச் சங்கத்திற்கு அனுமதி வழங்குகிறது.
- இவ்வகை நிறுமங்கள் வரையறு பொறுப்புடன் வரையறுக்கப்பட்டது அல்லது தனி வரையறுக்கப்பட்டது என்று வார்த்தை பெயருடன் இறுதியில் சேர்க்காமல் பதிவு செய்யப்படுகிறது.
- "இலாபமில்லா அமைப்பு என்ற தகுதிநிலையால் அனுமதி வழங்கப்படுகிறது. பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு மத்திய அரசு அனுமதி வழங்கும்.
- சங்கம் வரையறு பொறுப்பு என்றநோக்கத்துடன் மட்டுமே வணிகத்தை மேம்படுத்தவும் /கலை, அறிவியல், மதம், கருணை அல்லது பயன்படத்தக்க நோக்கத்துடன் அமைக்கப்படவேண்டும்.
- இலாப மீட்டலை நோக்கமாகக் கொண்டு செயல்பாட்டிருந்தால் அதன்

| | | |
|---|---|---|
| | இலாபத்தை அந்தநிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்த மட்டுமே வேண்டும்.<br>❖ அதன் உறுப்பினர்களுக்குப் பங்காதாயம் வழங்கக் கூடாது. இத்தகைய நிறுவனங்கள் பொது நிறுமமாகவோ அல்லது தனி நிறுமமாகவோ இருக்கலாம் அல்லது பங்கு மூலதனம் இல்லாமலும் இருக்கலாம் | |
| | (அல்லது)<br>**வங்கி மேல்வரைப்பற்று:**<br>❖ வங்கி மேல் வரைப்பற்று என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உடன்பட்டு ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில் வரவில் இருக்கும் தொகையைவிட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும்.<br>❖ எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறதோ அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வாடிக்கையாளருக்கான உரிய மேல்வரைப்பற்றின் உச்சவரம்பு அவரின் நடப்பு கணக்கில்சராசரியாக புழக்கத்திலுள்ள வரவிருப்பின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.<br>**வீட்டுக் கடன்:**<br>❖ கடன் பெறுபவரின் மாத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே நடுத்தர மற்றும் நீண்டகால வீட்டுக் கடன்களை வழங்கி ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே வீட்டினைப் பிணையமாக வங்கிகள் எடுத்துக் கொள்கின்றன.<br>❖ வாடிக்கையாளர் சமமானமாதத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் (EMI அசல் மற்றும் வட்டியைக் கொண்டது). ஒரு வீட்டின் மொத்தத் தவணையில் செலுத்தி வாங்கிட இயலாத நடுத்தர வகுப்பு வருமானமுள்ள பணியாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். | |

*********

**Department of Commerce**

**SHRI VIDHYABHARATHI MATRIC HR.SEC.SCHOOL**

**SAKKARAMPALAYAM , AGARAM (PO) ELACHIPALAYAM**

**TIRUCHENGODE(TK), NAMAKKAL (DT) PIN-637202**

**Cell : 99655-31727, 97906-33519**

***********